# இலக்கியங்களில் காணலாகும் சித்தர் பாடல்களின் நிலையாமை சிந்தனைகள்

18

முனைவர் த.நாகம்மாள் (SS)
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்
கோயம்புத்தூர் - 641 043.
19764naga@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

சித்தர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்த உலகில் வாழ்ந்துள்ளனர். அவர்கள் பதினெண்சித்தர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆனால் சித்தர்கள் பதினெட்டு பேர் கிடையாது. அதிக எண்ணிக்கையில் இருக்கின்றனர். பதினெண் என்பது பதியை எண்ணும் சித்தர்கள் என்பது பொருளாகும். பதி என்றால் இறைவன், சிவபெருமான் என்பது பொருள் ஆகும். சித்தர் பாடல்களில் காணப்படுகிற நிலையாமை சிந்தனைகள் பிற இலக்கியங்களிலும் காணப்படுகின்றன இதனை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்:** சித்தர்கள், நிலையாமை, யாக்கை, செல்வம், மரணம்

**முன்னுரை**

மனிதன் விழிப்புணர்ச்சியோடு இருந்தாலும் சாவு வருவதைத் தடுக்க முடியாது. சாவுக்குப்பயப்படாமல் இருக்க வேண்டும். **‘ஆறிலும் சாவு நூறிலும் சாவு’** என்கிறது பழமொழி. வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்த சித்தர்கள் உண்ணாநோன்பு இருந்து இறந்தனர். சித்தர்களின் இறப்பை முக்தி, ஜீவசமாதி என்று மக்கள் குறிப்பிடுகின்றனர்.உடம்பின் ஒரு மூலையில் குடியிருக்கும் உயிருக்கு நிலையாகக் குடியிருக்க வீடு இல்லை. மனிதன் செயற்கையாகக் கட்டிய வீடும் நிலை இல்லாதது ஆகும். நோய்க்குஇடம் தரக்கூடியது உடல் ஆகும். இந்த உலகில்செல்வம், இளமை, உடல், பொருள்கள், காலம் ஆகிய அனைத்தும் நிலையாமை ஆகும். உயிருள்ளவை, உயிரற்றவை அனைத்தும் நிலையாமை ஆகும். இவை சித்தர் பாடல்களில் நிறைந்து காணப்படுகின்றன.

**திருக்குறளில் நிலையாமை**

நிலை இல்லாத பொருள்களை நிலைக்கும் என்று கருதுகின்ற அறிவு மிகவும் தாழ்வானது. அதாவது வாழ்வின் அழிவை உணராத அற்ப அறிவு இழிவானது ஆகும். இந்த இழிந்த அறிவு

இருந்தால் இழிநிலையே உண்டாகும். வாழ்க்கையில் எதுவுமே நிரந்தரம் கிடையாது. ஒன்று கிடைக்கும் அது நாளை இல்லாமல் போகும். கிடைத்ததைக் கண்டு மகிழ்வதும் போனதைப் பற்றி வருந்துவதும் கூடாது. அனைத்தும் நிலையானது என்று எண்ணுவது தாழ்மையான அறிவுஆகும். ஒருவனிடத்தில் செல்வம் வந்து சேர்வதும் அவனை விட்டு நீங்குவதும் கூத்தாடும் அரங்கத்தில் கூட்டம் சேர்வதும் கலைவதும் போன்றது ஆகும். கூத்து ஆடுகின்ற இடத்தில் மக்கள் வருவதும் போவதுமாக இருப்பார்கள். ஆடுகிற கூத்தும் ஓரிடத்தில் நிலையாக இருப்பதில்லை. மக்களும் அது நிரந்தரம் என்று எண்ணக்கூடாது. கூட்டம் கலைந்து விடுவது போலவே செல்வமும் சிறிது சிறிதாக மக்களை விட்டு நீங்கிச் சென்று விடும். செல்வம்நிலை இல்லாதது அதனால் அந்த கிடைத்த செல்வத்தை வைத்து நிலைத்த புகழுடைய செயலைச் செய்யவேண்டும். செல்வத்தைக்கொண்டு அறச்செயல்களைச் செய்தால் மக்கள் அனைவரும் பயன் அடைவர். செல்வம் இல்லாத போது எந்தத் தேவைகளையும் மனிதன் பூர்த்தி செய்து கொள்ள முடியாது.

வாழ்க்கையின் உண்மைத் தன்மையை நன்கு அறிந்து உணரக் கூடியவர்கள், சிறிய கால அளவாகக் காணப்படும் நாள் என்பது கூட, ஒருவனது உயிரோடு கூடிய ஆயுள் காலத்தைச் சிறிது சிறிதாக அறுத்துக் குறைத்துக் கொண்டு வருகின்றவாளாக அமையக்கூடியதாகும் என்பதைத் தெளிவாக அறிவார்கள். காலம் உயிரறுக்கும் வாள் ஆகும். இறந்த காலத்தைத் திரும்ப வாங்க முடியாது. அதனால் தான் காலம் பொன் போன்றது என்கிறது பழமொழி.

*நெருநல்உளன் ஒருவன்இன்றில்லை என்னும்*
*பெருமை உடைத்து இவ் உலகு* **(திருக்குறள்எண்: 336)**

“நேற்று ஒருவன் இருந்தான்; அவன் இன்று இல்லாமல் இறந்து போனான்” என்று சொல்லும் அளவுக்கு, நிலையாமை என்பதைப் பெருமை உடைய பண்பாக இவ்வுலகம் கொண்டிருக்கிறது. இது இவ்வுலகத்தின் பேரியல்பு ஆகும். பிறந்தவர் அனைத்தும் இறக்கத்தான் போகிறார்கள். அதனைவயது, ஆயுள் காலம் தீர்மானிக்கிறது. மனிதன்நோய், தற்கொலை, கொலை, கவலை, விபத்து போன்றவற்றால் இறந்து விடுகிறான். இதனை விதியின் பயனாக மக்கள் கருதுகின்றனர். நாட்டில்பசி, பட்டினி, பஞ்சம், பெருமழை, சுனாமி ஆழிப்பேரலை, நிலநடுக்கம் போன்றவற்றால் இந்த உலகம் சிறிது சிறிதாக அழிந்து கொண்டுவருகிறது. வாழ்வின் நிலையாமையை உணராத அறியாமை கொண்ட மக்கள் பல கோடி எண்ணங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மனித மனம் இலட்சக்கணக்கான எண்ணங்களை ஒருநாளில் கொண்டிருக்கிறது. எண்ணங்கள் பல செயல் வடிவம் பெறாமல் இருப்பது நிலையாமை ஆகும். மனிதர்களிடத்தில் ஆசைகள், கனவுகள்,இலக்குகள், சிந்தனைகள் பல்வேறு விதமாகக் குவியல்களாக நிறைந்து காணப்படுகின்றன. அவற்றுள் பல நிறைவேற்ற முடியாதவை ஆகும். எதிர் பார்த்தவாழ்க்கை, வேலை பலருக்கும் அமைவதில்லை. கிடைத்தவேலை, வாழ்க்கையைப் பலரும் தக்க வைத்துக்கொள்வதுவும் இல்லை.

முட்டையின் ஓட்டை விட்டுப்பறவை பறந்து செல்வது போல உயிரும் இவ்வுடம்பை

விட்டு ஒரு நாள் சென்றுவிடும். பறவைக்குக் கூடு நிரந்தரம் கிடையாது. பறவைகள் நிலையான வாழ்க்கை இல்லாமல் இருப்பதை உணர்ந்ததால் தான் புலம் பெயர்ந்து வலசைபோகின்றன. மனிதன், உயிரினங்கள் உடம்பு தனியே கிடக்கும், உயிர் உடம்போடு கூடிய உறவை விட்டு நீங்கிவிடும் இது தான் உண்மை ஆகும். இறப்பு என்பது தூக்கம் வருதலைப் போன்றது ஆகும். பிறப்பு என்பது தூக்கம் நீங்கி விழிப்பதைப் போன்றது ஆகும். இறப்பை மீளா உறக்கம் என்று குறிப்பிடுவர்.

**ஔவையார்பாடலில் நிலையாமை**

***மருவினியசுற்றமும்வான்பொருளும்நல்ல***
***உருவும்உயர்குலமும்எல்லாம்- திருமடந்தை***
***ஆம்போதவளோடுமாகும்அவள்பிரிந்து***
***போம்போதவளோடும்போம்***

**(ஔவையார், மூதுரை, பாடல்எண்: 29)**

திருமகள் நம்மை வந்தடையும் போது சுற்றமும் செல்வமும், நல்ல உருவமும், உயர்வான குடிப்பிறப்பும் வந்தடையும். அவள் நீங்கிப் போய்விட்டால் அனைத்தும் நீங்கிவிடும். ஆதலால் அவை நிலையற்றவை ஆகும் என்கிறார் ஔவையார். எனவே வாழ்க்கை வாழ்வது சில காலம்தான். உறுதியாகச் சொல்ல முடியாது. வாழ்க்கையில் ஏற்றமும் இறக்கமும் இருந்து கொண்டே தான் இருக்கும்.

**சிவப்பிரகாசர் பாடலில் நிலையாமை**

***வருந்துமுயிரென்பான்வாயிலுடம்பிற்***
***பொருந்துதல்தானேபுதுமை- திருந்திழாய்***
***சிதநீர்பொள்ளற்சிறுகுடத்துநில்லாது***
***வீதலோநிற்றல்சிறப்பு***

**(சிவப்பிரகாசர்,நன்னெறி, பாடல்எண்: 12)**

ஓட்டைக் குடத்தில் நீர் இல்லாமல் ஒழுகிப்போதல் இயல்பானது. ஒழுகாமல் நிற்பது வியப்பானது ஆகும். அதுபோல ஒன்பது ஓட்டைகளை உடைய உடம்பில் உயிர் நீங்குதல் இயல்பாகும். உடம்பில் உயிர் தங்குவது வியப்பு என்று பெண்ணை விளித்துச் சிவப்பிரகாசர் பாடியுள்ளார்.

**வளையாபதி நூலில் நிலையாமை**

***வெள்ளமறவிவிரல்வேந்தர்தீத்தாயம்***
***கள்வர்என்றுஇவ்வாறிற்கைகரப்பத்தீர்ந்தகலும்***
***உள்ளில்ஒருபொருளைஒட்டாதுஒழிந்தவர்***
***எள்ளும்பெருந்துயர்நோய்எவ்வம்இகப்பவோ***

**(வளையாபதி,பாடல்எண்: 35)**

ஒருவன் சேர்த்த செல்வமானது வெள்ள நீர்ப் பெருக்கு, மறதி, வலிமை மிக்க வேந்தர், நெருப்பு, சுற்றத்தார், திருடர்கள் என்னும் இந்த ஆறு வழிகளிலும் உடையவனின் கைகளில் இருந்து கவரப்பட்டுத் தீர்ந்துபோகும். செல்வத்தின் நிலையாமை உணர்ந்து மனத்தால் எந்தப்பொருளின் மேலும் பற்று வைக்காது துறந்த சான்றோர் பிறர் இகழக்காரணமான பெருந்துன்பம் தரும் பிறவிப் பிணியில் இருந்து துன்பம் நீங்கி விடுபடுவார்கள். செல்வம் நிலையற்றது என்பதை உணரவேண்டும் என்கிறது இப்பாடல். தேடிச்சேர்த்தகைப் பொருள் எத்தனையோ வழிகளில் தீர்ந்து போகும். எனவே செல்வத்தின் மேல் பற்றைத் துறந்தால் பிறவிப்பிணியில் இருந்து விடுபடலாம் என்கிறது இப்பாடல்.

***வேல்கண்மடவார்விழைவுஒழியாம்விழையக்***
***கோல்கண்நெறிகாட்டக்கொல்கூற்றம்உழையதாம்***
***நாற்பதுஇகந்ததாம்நரைத்தூதும்வந்ததுஇனி***
***நீத்தல்துணிவாம்நிலையாதுஇளமையே***

**(வளையாபதி, பாடல்எண்: 40)**

வேல் போலும் நீண்ட கண்களை உடைய மடந்தையர்கள் மனிதர்களின் மேலான விருப்பத்தை ஒழித்துப் புறக்கணிக்கவும் சிலர் மட்டும் அம்மகளிரை விரும்புகின்றனர். நாற்பது வயது கடக்கும்போது ஊன்றுகோலானது கண் போல் நல்வழிகாட்ட, கொல்லுகின்ற கூற்றுவனும்நெருங்கிவர, தலைமுடி நரைத்து எமனுடைய தூதும் வந்தது இனி என நினைத்து இளமை நிலையற்றது என்பதை உணர்ந்து பெண்ணாசையை விட்டு விடுதலே நல்லது. இளமையின் நிலையாமை பற்றி இப்பாடல் கூறுகிறது. நாற்பதைக் கடக்கும் முன்பெண்ணாசையைக் கடக்கவேண்டும். நாற்பதுக்கு மேல் நரை, திரை, பிணி, மூப்பு, சாக்காடு எல்லாம் நெருங்கி வரும் இளமை நிலையற்றது என்று ஐயமின்றிக் கூறப்பட்டுள்ளது.

**முடிவுரை**

மனிதன் பிழைத்தல், இருத்தல், காத்தல் என்ற மூன்று நிலைகளைக் கடந்து வந்தால் தான் வாழ்தல் என்ற முறையைக் கடைப்பிடிக்க முடியும். அதிகமான மனிதர்கள் பிழைத்தல் என்ற நிலையிலேயே தான் இருக்கிறார்கள். இந்த உடலுக்கு உயிரோடு இருக்கும் போது வாசனைத் திரவியங்களைப் பூசிக்கொள்கின்றனர். மனிதன் உயிரோடு இருக்கும் போது மண்ணில் திரியும் அனைத்து உயிரிகளையும் வேட்டையாடி உண்கிறான். அவன் இறந்த பிறகு மண் அவனை உண்கிறது இது தான் மனித வாழ்க்கையின் உண்மை ஆகும். இரத்தன்டாடா இறந்தபிறகு அவருடைய உடலைக் காட்டில் உள்ள உயிரினங்களுக்கு இரையாக்கினார்கள். இறந்த பின்பு உடலுக்கு மதிப்பு இல்லாமல் போகிறது. அவன் செய்த அறங்கள் மட்டுமே அவனுடைய புகழைப் பேசும். மனிதர்கள் இந்த உலகத்தில் அனைத்தும் நிலையானது அல்ல என்பதை உணர வேண்டும்.

**துணைநூல் பட்டியல்**


1. தேனம்மைலெஷ்மணன், வளையாபதி குண்டலகேசி மூலமும் கதையும் உரையும், பாரதி பதிப்பகம், சென்னை, 2022
2. மாணிக்கம்,வ.சுப., ஏழிளந் தமிழ் நீதி நூல்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2015
3. நெடுஞ்செழியன், இரா., திருக்குறள் நாவலர் உரை, நன்செய்பிரசுரம், திருத்துறைப்பூண்டி, 2022